ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆகவே, விரைவிலே லிப்ட் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மற்ற ஆலோசனைகளும் பரிசீலிக்கப்படும் முடிந்தால் ஏற்றுக்கொள்ளப்படும். ஆனால், பிரசவத்திலே அக்கறை இருக்கிறவர்கள் குடும்பக் கட்டுப்பாட்டிலும் கொஞ்சம் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும், அதுபற்றியும் கேள்வியாவது கேட்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செஞ்சி ஆரம்ப சுகாதார நிலையம்

*316 வினா.—திரு. ரா. ரா. முனுசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி ஊராட்சி ஒன்றிய ஆரம்ப சுகாதார நிலையத்தில் படுக்கை வசதியை விரிவுபடுத்தும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) இக் கேள்வி எழவில்லை.

மதுரை மருத்துவக் கல்லூரியில் பணியாற்றும் வல்லுநர்கள்

*317 வினா—திரு. கி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை அரசாங்க மருத்துவ மனைக் கல்லூரியில் ஓய்வு பெற்ற பின்பு, பதவி நீட்டிப்பு கொடுக்கப்பட்டுள்ள டாக்டர்கள் எவரேனும் உள்ளார்களா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) கீழ்க்கண்ட இரண்டு மருத்துவ வல்லுநர்கள் ஓய்வு (Retirement) பெற்றபின் மறுபடியும் வேலையில் (Re-employment) நீடிக்கப்பட்டுள்ளார்கள்.

(1) டாக்டர் எஸ். ஏ. கபீர், டீன், மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை.

(2) டாக்டர் ஏ. ஏ. ஆசீர்வாதம், அறுவை சிகிச்சை இயல் பேராசிரியர், மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS